**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>அசல் வழக்கு எண். 166/2017</u>**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை

பி.வா.சா. 3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில் | த/பெ.: | கோவிந்தராஜ் |
| கிராமம்: | பரவாக்கோட்டை | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 48 | முகவரி: | 5/117 மேலத்தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 19.08.2025.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் வழக்கில் பிரதிவாதி தரப்பு 3 ம் சாட்சி ஆவேன். மேற்படி பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி வழக்கு விபரம் எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பெரியசாமி எனக்கு என்ன உறவு என்றால் - உறவில்லை, நண்பர். ரவிச்சந்திரனை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் - இடம் வாங்குவது சம்மந்தமாக பேசும்போது தெரியும். எவ்வளவு தொகையை யார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் - ரவிச்சந்திரன் ரூ.14,20,000/- பெற்றுக்கொண்டார். ரவிச்சந்திரனின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. ரவிச்சந்திரனுக்கு இந்த சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் - அவரது அப்பா வகையில் கிடைத்தது. தாவா சொத்து முழுவதும் ரவிச்சந்திரனின் அப்பாவிற்கு சொந்தம் கிடையாது என்றும் அந்த வகையில் அவரது அப்பா வகையில் கிடைத்தது என்பது சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல. ரவிச்சந்திரனுக்கே உரிமை இல்லாத சொத்தை பெரியசாமி வாங்கியுள்ள நிலையில் செல்லாத ஒரு ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு அந்த ஆவணத்திற்காக நான்

அளிக்கும் சாட்சியமும் ஏற்புடையது அல்ல என்றால் - சரியல்ல. ரவிச்சந்திரன் பெரியசாமிக்கு எழுதிக்கொடுத்த ஆவணமானது செல்லத்தக்கது அல்ல என்றாலும் அதனடிப்படையில் பெரியசாமி வழக்கு சொத்தின் அனுபவத்தை எடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் - சரியல்ல. பிரதிவாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.